செ.வெ.எண்: 13– 2020 நாள்:09.07.2020

# பத்திரிக்கை செய்தி

தமிழகத்தில் முதியோர் ஓய்வூதியத்திட்டம், விதவைகள் ஓய்வூதிய திட்டம் உட்பட 8 ஓய்வூதிய திட்டங்களுக்கு ஜீலை 2020 மாதம் முதல் இ-சேவை மையம் மூலமாகவே விண்ணப்பிக்க வேண்டும் என முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வருவாய்த்துறை சார்பில் இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டம், விதவைகள் ஓய்வூதிய திட்டம், கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதிய திட்டம், திருமணமாகாத பெண்கள் ஓய்வூதிய திட்டம், உழவர் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டம், இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட 8 ஓய்வூதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து வட்ட / மாவட்ட அளவில் வருவாய் துறை அதிகாரிகள் மூலம் நேரடியாக பெறப்பட்டு வந்தன. இந்நிலையில், ஓய்வூதிய திட்டங்களுக்கான விண்ணப்பங்களை இ-சேவை மையத்தின் வாயிலாக விண்ணப்பம் பெறுவதற்கான வசதிகளை செய்து தருமாறு தமிழ்நாடு மின்னாளுமை முகமையை மாநில வருவாய்த்துறை கேட்டுக்கொண்டதை தொடர்ந்து முதியோர், விதவைகள் உட்பட 8 ஓய்வூதிய திட்டங்களுக்கும் ஆன்லைன் விண்ணப்பங்கள் உருவாக்கப்பட்டு அவை அந்தந்த மின் மாவட்ட இணைய தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

இ-சேவை மையம் விண்ணப்ப வசதியை தொடர்ந்து பயன்படுத்துமாறு அனைத்து மாவட்ட நிர்வாகங்களுக்கு வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது, முதியோர், விதவைகள் உட்பட 8 ஓய்வூதிய திட்டங்களுக்கு ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் எனவும் நேரடியாக பொதுமக்கள் எவரும் மனுக்களை அளிக்கக்கூடாது எனவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.